திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வெற்றிகரமாக முடியுமென்று சொன்ன சொல்லை நான் ஏற்று இந்தப் பிரச்சினையை மிக விரைவிலே முடித்து, 11 மாத காலமாக வாடிக் கொண்டிருக்கிற 520 குடும்பங்களுக்கும் நல்லதொரு செய்தியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசு 100-வது நாளைக் கொண்டாடுகின்ற இந்த நன்னாளில் நல்ல செய்தியை அறிவித்த மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன்.

(ஆ) செங்கம் தொகுதியில் சில பகுதிகளில் நிலவிவரும் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க ஜப்தி காரியந்தல் ஆற்றில் உள்ள கிணற்றை அகலப்படுத்துவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் பெ. வீரபாண்டியன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் பெ. வீரபாண்டியன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் இந்த மின் விளக்குகளைவிட ஒளிச்சென்று அமர்ந்திருக்கும் நம்முடைய இதய தெய்வம் 100-வது நாள் காண்கிறது. 100 நாள் என்ன, நிச்சயமாக 100 ஆண்டுகள் வாழத்தான் போகிறீர்கள், ஆளத்தான் போகிறீர்கள். நம்முடைய இதய தெய்வத்தின் நல்லாட்சியில் மக்களின் . . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வீரபாண்டியன், அதிலே இருக்கிறதை அப்படியே படியுங்கள்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: படிக்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை நிகழ்ச்சி நிரலில் இருக்கிறதைப் படியுங்கள்.

1991 அக்டோபர் 1]

டாக்டர் பெ. வீரபாண்டியன்: தாகத்தைத் தீர்க்கும் தெய்வீக சேவையை வேண்டி தெய்வத்தின் முன் நின்று, செங்கம் தொகுதியில் சில பகுதிகளில் நிலவி வரும் குடிநீர்ப் பற்றாக் குறையைப் போக்க ஐப்திகாரியந்தல் ஆற்றில் உள்ள கிணற்றை அகலப்படுத்துவது குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஐப்திகாரியந்தல் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் பயன்பெறும் ஊராட்சிகள் மேல்படூர், சி. கெங்கம் பட்டு ஐப்திகாரியந்தல் ஆகியவையாகும். இத்திட்டத்தினால் பயனடையும் மக்கள் தொகை 5,387 என்றும் திட்ட மதிப்பீடு ரூ. 18.50 லட்சம் ஆகும். இத்திட்டம் 1985-ல் செயல்படுத்தப்பட்டு 1986-ல் குடிநீர் வடிகால் வாரியத்தால் ஊராட்சி ஒன்றிய பராமரிப்பிற்கு ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான குடிநீர் ஆதாரம் செய்யாறு ஆற்றிலுள்ள 4.5 மீட்டர் ஆழமும் 3.5 மீட்டர் விட்டமுள்ள உறை கிணறாகும். இக்கிணற்றில் மின் மோட்டார் மூலம் நீரேற்றம் செய்யப்படுகிறது. 1989 ஆம் ஆண்டு முதல் பருவமழை பொய்த்ததன் காரணமாகவும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவிட்ட காரணத்தாலும் உறை கிணற்றில் நீர் வரத்து இல்லாமல் போய்விட்டது. இதனால் குடிநீர்த் திட்டம் செயல்படாமல் உள்ளது.

1991-92 ஆம் ஆண்டில் சிறப்பு கிராமக்குடிநீர் திட்டத்தின் கீழ் மேற்படி உறை கிணற்றை, புவியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு உறை கிணற்றை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இக்கிணறு உறை கிணறாகையால் அகலப்படுத்த வழி யில்லை.

மேற்படி ஐப்திகாரியந்தல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அடங் கியுள்ள குடியிருப்புகளுக்கு நீர்வழங்க கீழ்க்கண்ட மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன :—

(அ) 1990-91-ம் ஆண்டு சிறப்பு கிராமக் குடிநீர் திட்டத்தின் கீழ் மேல்படூர் கிராமத்தில் ஒரு ஆழ்துளை கிணறு அமைக்கப் பட்டது. இவ்வாழ்த்துளை கிணற்றில் வறட்சி நிவாரணத்திட்டத்

தின்கீழ் ஒரு மின் மோட்டார் வாங்கி பொருத்தப்பட்டு ஏற்கனவே உள்ள மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியில் இணைக்கப்பட்டு மேல்படுர், மேல்படுர் ஆதிதிராவிடர் காலனி, மேல்படுர் ஜோதியர் காலனி மற்றும் கீழ்படுர் ஆகிய குடியிருப்புகளுக்கு குடிநீர் நல்ல முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) 1991ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தில் பெரிய குளம் குடியிருப்பில் ஒரு ஆழ்த்துளை கிணறு அமைக்கப்பட்டு நல்ல குடிநீர் வளம் உள்ளதாக அமைந்துள்ளது. இவ்வாழ்த்துளை கிணறு பெரியகுளம் குடியிருப்பிற்கு போதுமானதாக உள்ளது.

(இ) ஐப்திகாரியந்தல் ஆற்றில் உள்ள உறை கிணற்றை ஒரு மீட்டர் ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஒரு மீட்டருக்குப் பின் பாறையாக உள்ளதால் ஆழப்படுத்தும் பணி நிறுத்தப்பட்டு விட்டது.

(ஈ) சி. செங்கம்பட்டு மே.நீ. தேக்கத் தொட்டி கிணறு ரூ. 8,300 மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் ஆழப்படுத்தப் பட்டுள்ளது.

(உ) ஐப்திகாரியந்தல் கிராமத்தில் இரண்டு கிணறுகள் ரூ. 2,500 மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் ஆழப்படுத்தப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

ஐப்தி காரியந்தல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் பயன் பெறும் அனைத்து குடியிருப்புகளுக்கும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில் அமைந்துள்ள ஐப்தி காரியந்தல் ஆற்றில் உள்ள கிணறுகள் கூட்டு குடிநீர்த் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இக்கிராமம் கிட்டத்தட்ட 5 பஞ்சாயத்துக்களைக் கொண்டு இதனால் பயனடைகிறது. ஐப்திகாரிந்தல், செங்கம்பட்டு, கீழ்படுர், மேல்படுர் மற்றும் பெரிய குளம் கிராமங்கள் 4.5 அடி ஆழத்திற்குத் தோண்டிய பிறகு அந்த கிணற்றில் பல நாட்களுக்கு முன் புதைந்திருந்த ஒரு மரம் இருக்கிறது. அந்த மரம் இருக்கும் காரணத்தினால் மேலேயிருந்து உறைகளைச் செலுத்தும்போது 'ரிம்ஸ்' பொருத்தும் பொழுது ஸ்லேண்டிங் பொசிஷனில் இருக்கின்ற காரணத்தினால்

அங்கே அரிப்பு ஏற்பட்டு தூர்ந்துவிடும் நிலையில் இருக்கிறது. எனவே அந்த மரத்தை வெட்டி எடுப்பதைவிட ஆழப்படுத்திவிட்டால், அந்த மரம் சுலபமாக வெளியே வந்து அங்கே குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கும். எனவே அரசு அதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறு உறைகிணறு என்பதனாலே அதை அகலப்படுத்த முடியாது. அதை ஆழப்படுத்த வேண்டும் என்று பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படும் நிலையில் அதிலே மிகப் பெரிய பாறாங்கல் ஒன்று இருக்கிற காரணத்தாலே அதை ஆழப்படுத்தவும் இயலவில்லை. அப்படி ஆழப்படுத்த முடியாத நிலையிலும்கூட, அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு, நல்லமுறையிலே குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலை தொட்டிகள் கட்டியிருக்கும் அந்த நிலையில் அந்த மேல்நிலை தொட்டியின் மத்தியில் ஒரு பார்ட்டிஷனைப் போட்டு ஆல்டர்நேட்டிவ்வாக தண்ணீர் விட்டால் சுகாதார ரீதியாக மக்களுக்கு தண்ணீர் வழங்க இயலும். அதை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரது கோரிக்கையை ஏற்று அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

6. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1991ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.